Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

God is faithful for the past seventy years.

Vol. 70 | இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர். சங்.22:3 | ஜனவரி 2024 | No.1

"நீ என்னை நேசிக்கிறாயா?"

"Lovest Thou Me?"

A.B. Simpson

இயேசு உயிர்தெழுந்த பின்பு தமது சீஷருக்கு அளித்த ஒரு பிந்திய காட்சியில் பேதுருவிடம் குறிப்பாகக் கேட்ட கேள்வி, அவர் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இரவில் அவரை மறுதலித்த அவன் வாழ்வின் தோல்வியை நாம் எண்ணிப் பார்க்கச் செய்கிறது.

"பின்பு இயேசு சீமோன் பேதுருவை நோக்கி:யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன் ஆண்டவரே நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர். நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர் என்றான்". (யோவா.21:15,17)

"நீ என்னை நேசிக்கிறாயா?" என்று ஆண்டவர் சீமோன் பேதுருவிடம் கேட்டது அறிவுறுத்துவதும் மிகவும் முக்கியம் வாய்ந்ததுமாகும். நம்முடைய நண்பர்கள் நமது உத்தமத்தையும், பாசத்தையும் சந்தேகிப்பது போன்று நம்மை ஆழமாகக் காயப்படுத்துவது வேறொன்றுமில்லை. இன்னுமாக மூன்று முறை அவனிடம் இக்கேள்வியைக் கேட்டது அவன் மூன்று முறை அவரை மறுதலித்ததை வெளிப்படுத்துகிறது.

அன்பில் தோல்விகள்

இந்த கேள்வியை நமது தோல்விகளிலும் ஆண்டவர் நம்மிடம் கேட்கிறவராயிருக்கிறார். அவர் கடினமாக அல்ல, அதிக உருக்கத்தோடு, நமது நேர்மையின்மையினை நினைவூட்டி நாம் நமது மனச்சாட்சியிலும், இருதயத்திலும் தொடப்படும் வரைக்கும் அதே கேள்வியை மறுபடியும் மறுபடியும் கேட்டுக் கொண்டேயிருக்கிறார்.

நமது தோல்விகளுக்கு முக்கிய காரணமாயிருப்பது அன்பின் தோல்விகளல்லவா? இது வாழ்விற்கும், குணாதிசயத்திற்கும் ஏற்படும் மிகப்பெரிய சோதனை. நமது குறைபாடுகள், தோல்விகள் ஆண்டவர் பேரிலுள்ள அன்பின் குறைபாடு, சுயநல ஆவி, அவருடைய உயரிய அன்பு, சித்தம் ஆகியவற்றிற்குப் பதிலாக வேறெதையோ நாடுவது ஆகியவற்றால் நேரிடுகிறது.

அவரை அதிகமாக நேசிக்க வேண்டிய தருணங்களில் நமது தோல்விகள் ஏற்படுகிறது. எவ்வளவு தருணங்களில் அவர் நம்மை மன்னித்து, எத்தனை காலம் நம்மோடு பொறுமையாயிருந்து எவ்வளவு பொறுமையாக நம்மைப் போதித்திருக்கிறார்? அவருடைய பாடுகள், அளவற்ற இரக்கம், இவற்றை நினைத்து அவரை சந்திக்கவும், நமது குறைபாடுகளை மூடி மறைத்து நமது நன்றிக் கேடுகளை மறந்து நம்மை நேசித்து கடந்த காலங்களிலெல்லாம் நம்மை நடத்தினார். அப்படிப்பட்ட ஆண்டவர் தான் கேள்வியைக் கேட்கிறார்.

நமது அன்பின் மேலுள்ள அவரது உரிமை

இந்தக் கேள்வி நமது அன்பின் மேல் அவருடைய உரிமையைக் காண்பிக்கிறது. 'என்னை' என்று அவர் கூறுவது நமக்கு முன்பாக நின்று அவர் தமது உயரிய பயபக்தியை சரியான உரிமையாகக் கேட்பது நமக்கு விளக்கப்படுகிறது.

அவர் ஒருவரே தம்மைப் பற்றி அளவுக்கு மீறி தம்மை உயர்த்தாதபடி தமது அன்பினை உரிமை கொண்டாட முடியும். ஏனெனில் அவர் நமக்கு எத்தனை சிறந்தவர். பிதாவின் சிங்காசனத்தை விட்டு பூமியின் தாழ்விடங்களுக்கு இறங்கி சிலுவையின் வெட்கத்தினையும் வேதனையையும் நம்மீதுள்ள அன்பால் ஏற்றுக் கொண்டாரே. நீ பிறக்கும் முன்பாகவே உன்னை நினைத்து உனக்காக மரித்தார். அவர் உன்னை சிருஷ்டித்து, அழைத்து, அவரை அறிந்து அவரது கிருபைதனை பெற்றுக் கொள்ளச் செய்தார். உன்னை போதித்து, வழிநடத்தி, நேசித்து, பலவேளைகளில் விடுவித்து, அவரது ஆசீர்வாதங்களின் நிறைவுக்குக் கொண்டு வந்து அவரது கிருபையின் பொக்கிஷங்களை அளித்தார். உங்கள் இருதயங்களில் வாசம் பண்ணி, நோய்களைக் குணமாக்கி, வேதனைகளிலும் துக்கங்களிலும் கூடயிருந்து வந்தார். இன்று அளவில்லாத அவருடைய மகிமையின் ஐசுவரியங்களுக்காக ஆயத்தப்படுத்துகிறார். உங்களை அவருடைய சேவையிலும் இராஜ்யத்திலும் பங்காளிகளாக்கி கனப்படுத்துகிறார். அத்தகைய அருமை ஆண்டவர் நம்மிடம் 'நீ என்னை நேசிக்கிறாயா?' எனக் கேட்கிறார்.

அவர் அழகுமிகுந்தவர், மகிமையானவர், பரிபூரணமானவர், முற்றிலும் சிறந்தவர். இத்தகைய ஆண்டவர் ஏன் அவரே உண்டாக்கியதும் அவரது மகிமை, கிருபை இவற்றினை அறிவித்த வருமாகிய மனிதனிடம் ஏன் இப்படி கேட்க வேண்டும். தமது அன்பின் இரகசியங்களை அறிவித்ததும் தமது நெருங்கிய உறவுக்குள் கொண்டு வந்ததுமாகிய உங்களிடம் இக்கேள்வி தனைக் கேட்க வேண்டும். இக்கேள்வி நமது இருதயங்களை, பேதுருவின் இருதயத்தைப் போல உடையச் செய்கிற தாயிருக்கிறது. 'என் விலையேறப் பெற்ற பிள்ளையே, நீ என்னை நேசிக்கிறாயா?'

இவைகளெல்லாவற்றையும் விட கூடுதலாக என்னை நேசிக்கிறாயா?

'இவைகளிலும் (இவர்களிலும்) என்னை அதிகமாக நேசிக்கிறாயா?' இக்கேள்வியில் ஆண்டவரிடம் காண்பிக்க வேண்டிய மேலான அன்போடு போட்டியிடும் எல்லாம் அடங்கும். நண்பர் வட்டம், மற்ற சீடர்கள் எல்லாரும் கூட அடங்குவர். ஏனெனில் எல்லாரும் ஏமாற்றினாலும் தான் ஒரு போதும் அப்படிச் செய்வதில்லை என்று அவன் பெருமை பாராட்டியிருந்தான்.

அவனது தொழில், அவனது மீன் பிடிக்கும் வலைகள், (ஒரு வேளை அது சமீபத்தில் வாங்கியதாயிருக்கலாம்) அதையும் அவர் சுட்டிக் காட்டியிருக்கலாம். எத்தனை பேர் நம்மில் நமது வேலைகள் மூலம் இழுக்கப்பட்டு கிறிஸ்துவை எண்ணிப் பார்க்கவோ அவரை நேசிக்கவோ சமயமில்லாமலிருக்கிறோம். பொருளைத் தேடுதல், பேராசைகள், வெற்றி, தொழில், கவலைகள், இழப்புகளைப் பற்றிய பயங்கள், நோய்கள், தொழிலில் ஏற்படும் போராட்டங்கள் போன்றவை நமது எஜமானுடைய உறவிலிருந்து நமது உள்ளங்களையும் வாழ்வையும் அவரது உரிமைக்கு ஒப்புக் கொடுக்க முடியாமல் ஆக்கி விடலாம்.

சிலரது வாழ்வில் தனிப்பட்ட நண்பர்களின் கட்டுகள், குடும்ப பாசம், சமூக வாழ்வு போன்றவை காரணமாகின்றன. எதிராளி நமது இருதயங்களை நம் எஜமானுடைய மேலான அழைப்பிலிருந்து திசை திருப்ப விரும்பும் போது அவன் நம்மை ஒழுங்கற்ற பாசங்களிலும், விக்கிரகாராதனைகளிலும், உலக சினேகத்திலும், தூய ஆவியானவரின் செயலுக்கு எதிரான வழிகளிலும் ஈடுபடச் செய்து நம்மை ஏமாற்றி விடுகிறான். அவன் நம்மை பாவத்திற்கு

(3-ம் பக்கம் பார்க்க)

வாசகர் கவனத்திற்கு

வங்கி வழியாக காணிக்கை அனுப்புகிற வாசகர்கள் தகவல் தராவிட்டால், வாசகர் பெயர் எங்களுக்கு தெரியாதபடியால், ரசீது அனுப்ப இயலாது, பத்திரிக்கையும் அனுப்ப இயலாது.

உடனே எங்களுக்கு SMS or Whatsapp அனுப்புங்கள்

Mobile : **95432 21008**

Whatsapp : **9489740295**

e-mail:varukayinthoothan@hotmail.com

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2024 ஜனவரி மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், வெகு மனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும் துதிக்கிறேன்.

ஒரு அன்பு தாயார் நான் அலுவலகத்தில் இருக்கிற சமயத்தில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு என்னை விசாரித்தார்கள். அதோடு வருகையின் தூதன் ஊழியம் ஆரம்பித்ததில் இருந்து எழுதும்படி என்னை கேட்டுக் கொண்டார்கள். அவர்களுக்காக என் தேவனை துதிக்கிறேன், மிகவும் மகிழ்ச்சியோடு அவர்களுக்கு என் நன்றியை தெரிவிக்கிறேன்.

சில காரணங்களினால் எழுத மனமற்றவனாக இருந்தேன், ஆனால் வருகையின் தூதன் பத்திரிகைக்கு இந்த ஆண்டு ***விசேஷமானது*** என்று நான் எண்ணுவதால், ஆரம்ப நாட்களைப் பற்றி மிகவும் சுருக்கமாக எழுதுகிறேன்.

எனது தகப்பனார் காலஞ்சென்ற **பாஸ்டர். S. தேவதாசன்** அவர்கள் முதலாவது குமரி மாவட்டத்திலுள்ள ஆலன் கோட்டை, கோட்டையடி ஆகிய இடங்களில் உள்ள **C.S.I.** சபைகளில் பணியாற்றின பின்பு இதே மாவட்டத்திலுள்ள கண்ணனூர் **C.S.I.** சபையில் போதகராக நியமனம் செய்யப் பட்டார்.

13 ஆண்டுகள் இதே சபையில் ஊழியம் செய்தபின் 1955-ம் ஆண்டு வருகையின் தூதன் பத்திரிகைக்காக **C.S.I.** சபை வேலையை ராஜினாமா செய்தார். காரணம், வருகையின் தூதன் பத்திரிகை எந்த சபை பிரிவையும் சார்ந்த தல்ல. எல்லா சபை மக்களும் படிப்பது போல **TPM** சபை மக்களும் (முன்னர் **CPM**) படிக்கிறார்கள். வருகையின் தூதன் பத்திரிகையை படிக்க **TPM** சபையும் தடை செய்வதில்லை

நாகர்கோவில் பட்டணத்தில் ஹென்றி ரோட்டில் மேல்புறம் ஒரு வீடு, கீழ்புறம் ஒரு வீடு, வெட்டூர்ணிமடம், கேவ் தெரு போன்ற இடங்களில் உள்ள வீட்டு உரிமை யாளர்கள் கேட்டுக் கொண்டதால் மாற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

கடைசியாக நியூபோர்ட் தெருவில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்தோம். 12-வது மாதம் வெளியேற சொன்னார்கள். எனவே எதிர்புறம் இருந்த ஓடுகளாலான ஒரு பழைய வீட்டை எனது தகப்பனார் வாடகைக்கு எடுத் தார்கள். வீட்டு உரிமையாளர் ஓய்வு பெற்ற நீதிபதி ஆவார். அவருக்கு பண நெருக்கடி ஏற்பட்ட போது, "**வீட்டை வாங்குங்கள், அல்லது வெளியேறுங்கள்**" என்றார். இவ்விதமான ஒரு சூழ்நிலையில் எனது தகப்பனார் மிகவும் கண்ணீரோடு அந்த பழைய வீட்டை ஊழியத்திற்காக வாங்கினார்கள். கட்ட டத்தை பழுது பார்க்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத் தார்கள்.

நான் சிறுவனாக இருக்கும் போதே அச்சடிக்கப்பட்ட வருகையின் தூதன் பத்திரிகையை வேறொரு அச்சகத் திலிருந்து சைக்கிள் வண்டியில் வீட்டுக்கு எடுத்து வருவேன். பத்திரிகையை அனுப்புவதற்கானஅனைத்து வேலைகளை யும் செய்து, சைக்கிள் வண்டியில் தபால் அலுவலகத்திற்கு அனுப்புவேன்.

1969-ம் ஆண்டு வருகையின் தூதன் பத்திரிகையை அச்சிடுவதற்காக எனது தகப்பனார் அச்சகம் ஒன்றை நிறுவினார்கள். அச்சகத்தை மேற்பார்வை செய்யும்

ஆண்டு காணிக்கை ரூபாய் 500

பொறுப்பை எனக்கு தந்தார்கள். அன்று முதல் இன்று வரை ***தேவ கிருபையால்* 55 ஆண்டுகள்** வருகையின் தூதன் பத்திரிகையை அச்சிட்டு அனுப்பி வருகிறேன், தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

1991-ம் ஆண்டு எனது தகப்பனார் வயதின் காரணமாக பத்திரிகையின் உதவி ஆசிரியராக என்னை நியமித்தார்கள், 1999-ம் ஆண்டு முழுபொறுப்பையும் என்னிடம் ஒப்படைத்தார்கள். **13-08-1905-ல்** பிறந்த எனது தகப்பனார் **13-11-2005-ல்** தன்னுடைய ஓட்டத்தை முடித்தார்கள்.

அச்சகத்திற்கும் அலுவலகத்திற்கும் இடம் போதாத படியால், பழைய கட்டடத்தை கொஞ்சம் கொஞ்சமாக இடித்து, தேவ நடத்துதலின்படி ***தேவ மகிமை*** என்ற அலுவலக கட்டடத்தையும், ***தேவனுடைய வீடு*** என்ற தங்கும் இடத்தை யும் கட்டினதை வாசகராகிய நீங்கள் அறிவீர்கள்.

வருகையின் தூதன் ஊழியத்தைப் பற்றி 3 சாட்சிகளை மாத்திரம் கீழே எழுதுகிறேன்.

1. மும்பையில் பணியாற்றியபின் சொந்த ஊராகிய நாகர்கோவில் வந்த ஒரு தேவனுடைய பிள்ளை என்னிடம் நேரிடையாக கூறின சாட்சி இது.

வருகையின் தூதன் துண்டு காகிதத்தால் பொதியப் பட்டு வீட்டிற்கு எடுத்துக் கொண்டு வந்த ஒரு பொருளை பிரித்து, பார்த்து, அந்த துண்டு தாளை படித்து அதன் மூலம் இரட்சிக்கப்பட்ட ஒரு வேறு மத சகோதரி சபையில் சாட்சி கூறினார்கள்.

2. என்னுடன் இசைக்கருவி வாசிப்பவரான எனது நண்பர், தபால் துறையில் வேலை கிடைத்து சென்னை சென்றார். திருமணம் முடிந்தது. குடும்ப வாழ்க்கையில் பெரும் புயல் வீசினது. என்ன காரணம் என்பதை ஏற்கெனவே எனக்குத் தெரிவித்திருந்தார். ஒரு நாள் அவர் எனக்கு போன் பண்ணினார்:

"***பிரதர், வருகையின் தூதன் பழைய பத்திரிகைகளை வாசித்து, வாசித்து ஆறுதல் அடைகிறேன்***" என்றார்.

இந்த சகோதரன் வருகையின் தூதன் ஊழியத்தை மாதந்தோறும் தாங்கினதோடு, உபவாச ஜெபங்களிலும் கலந்து கொள்வார், அல்லேலூயா!

3. 7 மணி நேர உபவாச ஜெபங்களுக்காக அந்தமான் போனதை வாசகர் அறிவீர்கள். அங்குள்ள ஒரு ஊழியர் என்னிடம், "***வருகையின் தூதன் பத்திரிகைகளை பைண்ட் பண்ணி, அது சிதலமடையும் வரை வாசிப்போம்***" என்றார்.

அந்தமானிலிருந்து ஒரு சகோதரி கடந்த சில மாதங் களாக, மாதந்தோறும் ரூபாய் 500 மணியாடர் அனுப்பி வருகிறார்கள்.

(7-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்புகள்

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் – 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab **N**ational **B**ank, Nagercoil -1. IFSC Code : **PUNB**0213120

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA**0000063

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **61822200136904**
Canara **B**ank, Ngl-1 IFSC Code : **CNRB**0001110

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வழி நடத்த முடியாவிட்டாலும் அவன் நம்மை எதிலாவது ஈடுபடுத்தி வாழ்வாகிய கப்பல் சரியான திசையில் செல்ல முடியாத நிலையை உணர முடியாமல் செய்து விடுகிறான்.

இன்னும் சில வேளைகளில் கிறிஸ்துவின் உயரிய அன்பிலிருந்தும் அவரது உன்னத சேவையின் உரிமையிலிருந்தும் வாழ்வின் சுவைகளாலும், சீர்திருத்தங்களாலும் திருப்பப்பட்டு, விடுகிறோம். ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் தங்கள் பணத்தினை கலைகளுக்காக, சொகுசான வாழ்வுக்காக, சிறப்பான இல்லங்களுக்காக, விலையுயர்ந்த வீட்டு உபயோகப் பொருட்களுக்காக, விலையுயர்ந்த மோட்டார்களுக்காக, இன்னும் அவசியமற்ற அலங்கரிப்புகளுக்காக, இசை மற்றும் மார்க்க சம்பந்தமான பொழுது போக்குகளுக்காக செலவு செய்கிறார்கள். அந்நிய நாட்டு ஊழியங்கள் இன்று அதிகமாக தேவ பிள்ளைகளின் வீண் செலவுகளால் தடுக்கப்பட்டு விட்டன. அவர்கள் இரண்டாம் தரமான காரியங்களுக்காக அதாவது பிசாசு, உலக இன்பங்களுக்காக அதிகமாக செலவு பண்ணுகிறார்கள். இவ்வாறு செலவு செய்கிற மக்களைப் பார்த்து "**இவைகள் எல்லாவற்றையும் விட கூடுதலாக என்னை நேசிக்கிறாயா**"? என்று கேட்கிறார். நம்முடைய அன்பை அவர் உண்மையாக விசுவாசிக்க முடியுமா?

கிறிஸ்துவின் மேல் மட்டுமுள்ள ஆழ்ந்த பக்தி

இந்த ஒரே கேள்வியை கிறிஸ்து நம் ஒவ்வொருவரிடம் கேட்கிறார். இந்த கேள்விக்குரிய சரியான பதில் கொடுக்க முடியாவிட்டால் நாம் ஒன்றுமில்லாதவர்கள். கடைசி நாளில் அவர் வரும் போது நடப்பது: ஒருவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அன்பு கூராமற் போனால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். (1 கொரி.16:22)

மறுக்கப்படுவதற்கான முதல் அடையாளம் அன்புத் தாழ்ச்சி. எபேசு சபை அதின் ஆதி அன்பை இழந்தபடியால் புறந்தள்ளப்படுவதற்கு ஏதுவாயிருந்தது. லவோதிக்கேயா சபை வெதுவெதுப்பானபடியால் ஏஜமானுக்கு அருவருப்பாயிற்று. நமது பேச்சு, நமது பணிகள் யாவும் அவருக்கு உண்மையான பக்தியுடனிராவிடில் அவை அவருக்கு வெறுப்பாகவேயிருக்கும். வாழ்வின் அடிமட்டம் வரை அவர் உங்களை சோதித்துப் பார்க்கும் வரை 'என்னை நேசிக்கிறாயா?' என்று கேட்டுக் கொண்டேயிருப்பார்.

இந்தக் கடைசி நாட்களில் அவர் தமக்குப் பின் செல்லுகிறவர்களை மட்டுமல்ல வெளி.14:4-ல் கூறப்பட்ட படியே ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்களையே தேடுகிறார். நண்பர்களை மட்டுமல்ல அவர் கட்டளையிடுகிறயாவையும் செய்கிறவர்களையே தேடுகிறார். (யோவா.15:14) ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தில் பங்கு கொள்ளுகிறவர்களையல்ல, தூய்மையான பிரித்தெடுக்கப்பட்ட, அவரையே நேசிக்கிற வேறு யாருடனும் பகிர்ந்து கொள்ளாத அன்பைக் காண்பிக்கிற ஒரு மணவாட்டியை தேடுகிறார்.

யார் இப்படி பதில் கொடுக்க முடியும்? "ஆண்டவரே, உமக்கு அருகாமையிலுள்ளதை நான் தூரப்படுத்தாமலும் உமக்குப் பிரியமானதை எனக்கு மிகவும் நல்லதாகவும் கொள்வேனாக. ஆண்டவரே நான் உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்".

"ஞான் உம்மை ஞேசிப்பதை ஈர் அரிவீர் என் இதயம் முழுவதும் உம்முடையதே ஏனெனில் ஞான் எப்போதும் உம்முடையவன் ஈரும் என்னுடையவரே"

அன்பு தன்னை நிரூபித்துக் காட்ட வேண்டும்

அன்பு என்பது மனஎழுச்சியை விட மேலானது. அது கண்டனம், உறுதி, பேச்சுவன்மை இவை எல்லாவற்றையும் விட மேலானது. அது செயல்பாட்டில் இருக்க வேண்டும். தியாகம், கீழ்ப்படிதல் ஆகியவற்றிற்கு உடன்பட்டு அவர் கட்டளையிடும் சேவைதனை செய்ய வேண்டும்.

பேதுருவின் ஒவ்வொரு பதிலும் ஒவ்வொரு விசேஷ கட்டளையால் திரும்பக் கூறப்பட்டது. அவை "என் ஆடுகளை மேய்ப்பாயாக... என் ஆட்டுக் குட்டிகளை மேய்ப்பாயாக" என்பதே.

ஆகாயத்தில் சிலம்பம் பண்ணுகிறவர்களாக வாழ்ந்து நமது பக்தியைப் பற்றிப் பேசுவது போதுமானதல்ல. உற்சாகமான பாடல்களைப் பாடி மேன்மையான கவிதைகளை தேவனுக்காக எழுதுவதும் போதாது. அவர் எதிர்பார்க்கும் அன்பின் சோதனை தேவையுள்ள, இழந்து போன, பாடுபடும் மக்களுக்காக நாம் எவ்வளவாய் கவலைப்படுகிறோம் என்பதாகும். அவைகளைத் தேடி கண்டுபிடித்து அவர் செய்தது போல பணிவிடை செய்கிறோமா? அவருடைய அன்பு பேச்சினாலல்ல அவருடைய ஜீவனைக் கொடுப்பதின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்". (ரோம.5:8)

இதுவே தேவன் தமது அன்பை நமக்கு வெளிப்படுத்தும் வழி. அவ்வாறே நாமும் அன்புகூர அழைக்கப்படுகிறோம். சீன மொழியில் யோவான்.3:16-ஐ இப்படி வாசிக்கிறோம்: அவர் தம்முடைய ஒரே பேறான குமாரனை கொடுக்கும் அளவில் நம் எல்லாரையும் நேசித்தார். நமது அன்பு நாம் கொடுப்ப வர்களாகவும் நமது மிக உச்சிதமானதை கொடுக்கும் அளவில் நம்மை வழி நடத்துவதாகவுமிருப்பதாக.

அன்பில் வேரூன்றி நிலைநாட்டப்படுதல்

Rooted and grounded in love

Rich Carmicheal

தேவன் நமக்குப் பாராட்டிய அன்பும் நாம் அவரிடம் காண்பிக்கும் அன்பும் நாம் பிறரிடம் காண்பிக்கும் அன்பும் முக்கியமானவை. இப்படிச் சொல்ல இரு முக்கிய காரணங்கள் உண்டு.

முதலாவது அன்புதான் நமது வாழ்வில் ஆண்டவரின் சித்தத்திற்கு மையமாக அமைகிறது. இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்றால்: "இஸ்ரவேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழு பலத்தோடும் அன்பு கூருவாயாக என்பதே பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால் உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே. இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை என்றார்". (மாற்கு 12:30,31) "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள், நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" யோவா.13:34. "நாம் அன்பில் பெருக வேண்டும்" பிலி.1:9. "ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்".(1 பேது.4:8) "அன்புடன் சத்தியத்தைக் கைக்கொள்ள வேண்டும்". (எபே.4:15) "அன்பிலே நடந்து கொள்ளுங்கள்" எபே.5:2. "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள் என்றார்". (யோவா.14:35) "அன்பில்லாவிட்டால் நாம் ஒன்றுமில்லை'. (1கொரி.13:1-3) "அன்பில்லாதவன் தேவனை அறியான். தேவன் அன்பாகவே இருக்கிறார்". (1யோ.4:8)

இரண்டாவதாக நாம் அன்பைக் குறித்து ஏன் ஜாக்கிரதையாக சிந்திக்க வேண்டும் என்றால் இயேசு இவ்வாறு எச்சரிக்கிறார். "அனேகருடைய அன்பு தணிந்துபோம்" மத்.24:12. மனுஷர் ....சுபாவ அன்பில்லாதவர்களாகவும்... தேவ பிரியராயிராமல் சுகபோக பிரியராயும்... இருப்பார்கள். (2 தீமோ.3:24) இவைகளோடு கூட பலத்த விசுவாசிகள் கூட தங்கள் ஆதி அன்பை விட்டு விடுவார்கள். நற்கிரியைகளைச் செய்து, உபதேசத்தில் கவனமாகவும், விடாமுயற்சியோடுமிருந்த எபேசு சபை இவ்வாறு கண்டிக்கப்படுகிறது: "ஆகிலும் நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு". (வெளி.2:4)

இவை எல்லாவற்றையும் மனதிற் கொண்டு நம்முடைய வாழ்வில் அன்பு இருக்கிறதா என்பதை சிந்திப்போம். நாம் ஆண்டவரில் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும், முழு பலத்தோடும் அன்பு கூருகிறோமா? மற்றவர்களோடு அன்பு நிறைந்தவர்களாகக் காணப்படுகிறோமா? நமது சகோதர சகோதரிகள் அயலார் இன்னும் விரோதிகள் நம் அன்பைப் பெற்றுக் கொள்கிறார்களா?

மறுபடியும் தூண்டிவிடப்பட்ட அன்பு

நீங்கள் ஏதேனும் குறைபாடு உண்டென்று எச்சரிக்கப்பட்டால் அன்பு

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மறுபடியும் தூண்டி விடப்பட வாய்ப்பு உண்டென்பது ஒரு நல்ல செய்தி. "ஆகையால் நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து மனந் திரும்பி ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக" வெளி.2:5. "நாங்கள் உங்களிடத்தில் வைத்திருக்கிற அன்புக்கொப் பாய் நீங்களும் ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பிலும் மற்றெல்லா மனுஷரி டத்தில் வைக்கும் அன்பிலும் கர்த்தர் உங்களைப் பெருகவும் நிலைத் தோங்கவும் செய்வாராக" 1 தெச.3:12. ஆவியின் கனிகளைக் குறித்து கலா.5:22-ல் படிக்கிறோம். "தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால்..." ரோம.5:5. "மேலும் அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து..." எபி.10:24

(எபேசி.3:16-19) படிப்போம்.

நமது முழு இருதயத்தோடும் தேவனில் அன்பு கூருதல்

Loving God with all our heart

George D. Watson (1845-1923)

முதலாவதானதும் மிக முக்கிய மானதுமான கட்டளை தேவனாகிய கர்த்தரில் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் முழுமனதோடும், முழு பலத்தோடும் அன்பு கூருவதாகும். (மத். 22:38, மாற்.12:30) எந்த ஒரு மனிதனும் உண்மையான சமாதானமும், சந்தோஷமும் பயனுமுள்ள வாழ்க்கை வாழ மறுபடியும் பிறந்து சுத்திகரிக்கப்பட்டு தன் சிருஷ்டிகரை முழு இருதயத்தோடும் நேசிக்க வேண்டும். ஒரு சிறுபான்மை மக்கள் மட்டுமே தங்கள் வாழ்வை முற்றிலும் கட்டளைக்குக் கீழ்ப்படிய ஒப்புவித்து மிகுந்த நன்மைகளைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

இவ்வுலக மக்கள் முதலாம் கற்பனையை இதய பூர்வமாக கைக் கொண்டால் இவ்வுலகில் பரலோக மாற்றங்கள் ஏற்படலாம். இதைக் குறித்து சிந்திப்பது தேவன் யார்? என்பதைக் குறித்த ஒரு பெரிய கண்ணோட்டத்தையும், அவரது வார்த்தை என்ன? அவரது அன்பு எத்தகையது? என்பதை அறியவும் உதவியாயிருக்கும். உபா.6:5-ல் "நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும் அன்பு கூருவாயாக" என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த ஒரே கட்டளை ஏறக்குறைய அனைத்து உலகையுமே பரதீசாக மாற்றுவதற்குப் போதுமானது.

பாவத்தால் நமது ஆத்துமாக்கள் தாழ்வடையாமலிருந்தால் தேவன் இந்தக் கட்டளையைக் கூற அவசியமிருந்திருக்காது. பாவமில்லாதிருந்தால் இக்கட்டளை ஒரு ஆசீர்வாதமான வாய்ப்பாயிருந்திருக்கும். பாவம்தான் இந்தக் கட்டளை கொடுக்கப்படுவதற்குக் காரணமாயிருந்தது. நாம் சரியான அளவு ஞானமுள்ளவர்களானால் தேவனை நேசிப்பது ஒரு மிக இனிய சந்தோஷமாகும். நாம் தேவன் யார் என்பதையும், அவர் நமக்கு எப்படிப்பட்டவர் என்பதையும் அறிந்திருந்தால் நாம் நமது முழங்கால்களில் நின்று இந்த அரிய வாய்ப்புக் காக நன்றி சொல்லுவோம்.

சிலர் தேவனை நேசிக்காததற்கான காரணம் இயற்கையாகவே அவர்களில் நேசிக்க வேண்டிய விதமான அன்பு இல்லை. அவருடைய அன்பினால் தான் அவரை உண்மையாக நேசிக்க முடியும். நாம் உண்மையாகவும் வேத வாக்கியங்களின்படியும் தேவனை நேசிக்க தெய்வீக அன்பு தூய ஆவியான வரின் செயலால் நம்மில் ஊற்றப்பட வேண்டும்.

கிரேக்க ஏற்பாட்டில் அன்புக்கு இரு பதங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஒன்று 'philos' (ஃபிலாஸ்) இது எந்த இயற்கையான மனித பாசத்தையும் குறிக்கிறது. மற்ற பதம் 'agape' (அகேப்) என்பது தெய்வீக அன்பு அதாவது தேவனது குணாதிசயத்தையும் உணர்ச்சிகளையும் குறிக்கிறது. எப்படி மனித பாசத்தை இயற்கைப் பிறப்பினால் பெற்றுக் கொள்கிறோமோ அதே விதமாக தெய்வீக அன்பை ஆவிக்குரிய பிறப்பின் மூலம் பெற்றுக் கொள்கிறோம். தெய்வீக அன்பை பெற்ற பின்னரும் நாம் சுத்திகரிக்கப்பட்டு ஆவியானவரின் அக்கினி அபிஷேகத்தைப் பெற வேண்டும். அப்போது தான் இந்த தெய்வீக அன்பை முழு சுயாதீனமாக நாம் பயன்படுத்த முடியும். எவ்வழிகளில் நமது அன்பை ஆண்டவருக்குப் பதிலாக செலுத்த முடியும்:-

1. நன்றி நிறைந்த அன்பு

புதிதாக மனந்திரும்பிய ஒருவரது இருதயத்திலிருந்து எழும்பும் அன்பு இவ்வகையானது. அது துதி ஸ்தோத்திரங்கள் நிறைந்தது. அது இயேசுவின் இனிய நன்றி கீதத்தைப் பாடும்: "பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து பாலகருக்கு வெளிப் படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்". (மத்.11:25) மிரியாமோடு சேர்ந்து தம்புருவை எடுத்துக் கொண்டு சகல ஸ்திரீகளோடும், நடனத்தோடும் "கர்த்தரை பாடுங்கள், அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார். குதிரையையும், குதிரை வீரரையும் கடலிலே தள்ளிப் போட்டார்" யாத்.15:21 என்பது செங் கடலைக் கடந்த போது பாடிய பாட்டு. மேலும் அன்னாளோடு சேர்ந்து பாடும் பாட்டு, "அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார். அவர்களைப் பிரபுக்களோடு உட்காரவும் பண்ணுகிறார். மகிமையுள்ள சிங்காசனத்தை சுதந்தரிக்கவும் பண்ணுகிறார்" 1 சாமு.2:8.

நன்றி நிறைந்த அன்பு தேவனுடைய இரக்கங்களை ஒவ்வொன்றாக எண்ணி மகிழ்கிறது. அவற்றை அருளிய தேவனை புகழுகிறது. நன்றி நிறைந்த அன்பு, மரியாளைப் போல (லூக்.2:19) தன் இருதயத்திலே சிந்திக்கச் செய்கிறது. மற்றவர்கள் இவற்றை சிறிய ஆசீர்வாதம், இரக்கம், ஜெபத்திற்கான ஒரு சிறிய பதில் என்று எளிதாக எண்ணலாம். ஆனால் நன்றி நிறைந்த அன்பு, தேவனுடைய மகிமையை மற்றவர்கள் காணக்கூடாத ஆயிரக்கணக்கான சிறு சிறு காரியங்களை அன்புக் கண்ணால் கண்டு துதிக்கிறது. மற்றவர்கள் அதனைக் கண்டுக் கொள்ள கற்றுக் கொள்ளவில்லை.

இந்த அன்பு தாழ்மையும், மனந்திரும்புதலின் ஆவி நிறைந்தது மானது. தான் தகுதியற்றவன் என தன்னை அர்ப்பணிக்கச் செய்து தெய்வீக நற்குணங்களை உடையதாயிருக்கிறது. ஆசீர்வாதங்களை அளிக்கும் விலையேறப் பெற்ற கரங்களால் அவற்றை அளக்கிறது. மேலும் இவ்விதமான நன்றி இனிய நறுமண பலியை ஒவ்வொரு நாளும் பலமுறை ஏறெடுத்து 'நன்றி தகப்பனே' என்று துதிக்கிறது.

2. தேர்வு செய்யப்பட்ட அன்பு

தேர்வு செய்யப்பட்ட தேவ அன்பு என்பதினால் நாம் அவரை சிருஷ்டிப்பிலுள்ள அனைத்து கிரியைகளோடு தாரதம்யப்படுத்துகிறோம். அவருடைய உயர்வை எல்லாவற்றோடும் ஒப்பிடுவதோடு, அவரது சிறந்த வழிகள், அதிகாரம், பராமரிப்பு, உருக்கம், இரக்கங்கள் இவை எல்லா சிருஷ்டிகளுக்கும் மேலாக இருப்பதை ஒப்பிடுகிறோம். இந்த விதமான அன்பு இவ்வுலகில் நல்லவை என்று தெரிகின்ற யாவிலும் இருக்கிற வெறுமை, ஏமாற்றம், நிலையாமை போன்றவற்றை தெளிவாகக் காண்பிக்கிறது.

இந்த தேர்வு செய்யும் அன்பு நமது தேவனை தூதர்களோடும், பரிசுத்தவான்களோடும், சாதாரண மனிதரோடும் ஒப்பிடச் செய்து, அவரை எல்லாவற்றிற்கும் மேலாக தெரிந்தெடுக்கச் செய்கிறது. ஒரு வைரமும் ஒரு பிடி களிமண்ணும் நம்முன் வைக்கப் பட்டால் ஒரு பொக்கிஷமாக வைரத்தை நாம் தெரிந்தெடுப்பது போல அவரைத் தெரிந்தெடுப்போம். தேவனை தூரப் படுத்தும் எப்பொருளையும் அகற்றி விடுவோம். இவ்வன்பு எல்லா தெய்வங்களையும், பொய் தீர்க்கதரிசிகளையும், பொய் மார்க்கங்களையும் விலக்கும். தேவனுக்குக் கொடுக்க வேண்டிய இடத்தை அபகரிக்கும் அல்லது சிறிய இடத்தையேனும் பகிர்ந்து கொள்ள முயற்சிக்கும் அவரது மதிப்பு, துதி போன்ற எதையும் பகிர்ந்து கொள்ளும் எதையும் அது தவிர்க்கும்.

பேதுரு இதைக் குறித்து (1பேது.3:15) கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள் என்கிறார். அதாவது தேவனுக்கு அவருக்குரிய இடத்தை நம் இருதயத்தில் கொடுக்க வேண்டும். இந்த அன்பால் எல்லா விக்ரகங்களையும்

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

உடைத்து, எல்லா கட்டுகளையும் அறுத்து, எல்லா வேட்கைகளிலுமிருந்து திரும்பி, நட்புகளை நீக்கி, உலக மற்றும் சபையிலுள்ள மதிப்பு, ஆசை போன்ற வற்றை அகற்றி அவருடைய உரிமை களை தழுவி, கூடிய மட்டும் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். இந்த அன்பின் மூலம் அவரது சர்வாதிகாரத்தை நாம் உயர்த்தி அவரது மகிமைக்குப் போட்டி யாக வரும் எதையும் அகற்றுவோம். இவ்வகையான அன்பு கிறிஸ்துவை கர்த்தாதி கர்த்தாவாக மேன்மைப்படுத்து கிறது. இவ்வுலகின் காரியங்களை விட்டுப் பிரிக்கும் ஆவி இவ்வகை அன்பின் விசேஷித்த கனியாகும்.

3. திருப்தியான அன்பு

இவ்வகையான அன்பு சமாதான மாகவும், திருப்தியோடும், நிறைவோடும் அவரது ஆசீர்வாதமான பரிபூரணங்களில் மகிழ்ச்சியடைகிறது. இதைக் குறித்து "பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்ப மில்லை" (சங்.73:25) என்று சங்கீதக்காரன் பாடுகிறார். "என் நேசர் பதினாயிரம் பேரிலும் சிறந்தவர், அவர் முற்றிலும் அழகானவர்" உன்.5:10,16-ல் என்று படிக்கிறோம். இவ்வகை அன்பு அவருக் காகவே, அவரது நித்திய அழகிய தன்மைக்காக, குணத்தின் இனிமைக்காக, அவரது தன்மைகளின் விவரிக்க முடியாத மாட்சிமைக்காக அவரது பரிபூரணத்தின் மென்மையான அழகுக்காக அவரை நேசிக்கிறது.

தூய ஆவியானவர் நம்மில் வாசம் செய்தால் மட்டுமே, அவர் சுத்திகரித்து பிரகாசிப்பதால் நம் ஆத்துமா இவ்வித அன்பைப் பெற முடியும். "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனை தரிசிப்பார்கள்". இந்த வாழ்வில் விசுவாசத்தினால் தேவனு டைய நபரத்துவத்தையும் குணாதி சயத்தையும் காண முடியும். தெரிந் தெடுக்கும் அன்பு தாரதம்யப்படுத்தும் போது இந்த அன்பு இனிமையாக தேவனோடு உறவாடி திருப்தியும் பூரண மடைவதால் மற்ற பொருட்களையும் மனிதர்களையும் மறந்து விடுகிறது. ஏனெனில் பரிசுத்தமும் அழகும் நிறைந்த தேவ பிரசன்னம் முழு ஆகாயத்தையும் நிரப்பி விடுவதால் வேறு எதுவுமே காணப்படுவதில்லை.

திருப்தியான அன்பு தேவன் இருக்கிறவராகவே இருப்பதால் அவர் மாறாதவரென்று களிகூருகிறது. நித்திய காலமாகவே வேறு எந்த தேவனுமிருப் பதில்லை என்று மகிழ்ந்து நடன மாடுகிறது. முடிவற்ற எதிர்காலத்தை அது பார்க்கும் போது ஒரு சிறு மாற்றத்தின் நிழல் கூட அவரது பிரகாசமான குணத்தை மறைப்பதில்லை. இன்று அவர் நமக்கு எப்படியிருக்கிறாரோ, முடிவற்ற யுகங்களிலும் அவர் அப்படி யேயிருப்பார். திருப்தி நிறைந்த அன்பு தேவனுடைய எல்லா பண்புகளிலும் இரகசிய இன்பத்தைக் காண்கிறது. அவர் செய்கிற செயல்களையெல்லாம் புகழு கிறது. அவரது தன்மைகளைக் கண்டு அள விவில்லாத சமாதானத்தைப் பெறுகிறது.

4. விருப்பத்தின் அன்பு

இவ்வித அன்பினால் நாம் தேவன் மேல் தாகமடையவும் வாஞ்சிக் கவும் செய்கிறோம். இந்தவித அன்பு தாவீது அரசரிடத்தில் காணப்பட்டது. "கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்... கர்த்தருடைய மகிமையைப் பார்க்கவும்... கர்த்தரு டைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்" சங்.27:4. மேலும் "**மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுகிறது**" சங்.42:1.

மூன்று நிலைகள் அல்லது வகைகளில் ஆவிக்குரிய தாகமுண்டு. முதலாவது பாவ மன்னிப்புக்கான தாகம், இரண்டாவதாக தூய்மையைப் பெறு வதற்கான தாகம், மூன்றாவது ஜீவனுள்ள தேவனுடைய நிறைவாகிய அவருக்கான வாஞ்சை. முறைப்படி தேவனை வாஞ் சிக்க இருதயம் அவரைப் புகழ்ந்து பாடுவதும், நீங்கா உறவுடனிருக்கவும் அவரது குணாதிசயங்களைப் ருசிப்பது மாகும். இந்த விதமான அன்பு தானியே லிடம் காணப்பட்டது. தூதன் தானியே லிடம் 'நீ மிகவும் பிரியமானவன்' என்கிறான். (தானி.9:23) அதாவது தேவனுக்காக அதிக வாஞ்சையுடைய வன். ஒரு கிறிஸ்தவன் தேவனுக்காக உத்தம இருதய வாஞ்சையுடையவனா யிருக்க வேண்டும். ஆனால் வித்தியாச மான ஆத்துமாக்களில் வெவ்வேறு வடிவான அளவான வாஞ்சை காணப் படுகிறது.

இந்த விருப்பத்தின்அன்பு தான் ஆத்துமாவை தேவனைஅவருடைய மூன்று நபரத்துவங்களில் அறியவும், அவரது உறவினை புரிந்து கொள்ளவும் அவரது குணாதிசயங்களிலும் பரி பூரணங்களிலும் தெய்வீக தன்மையுடன் நிரம்பியிருக்கவும் இழுத்துக் கொள்கிறது. ஜீவனுள்ள தேவனைத் தவிர சிருஷ்டிகள் எல்லாவற்றிலும் நமது அழிவில்லாத ஆவிகளை திருப்திப்படுத்த முடியாது. இந்த இனிய தாகத்தின் வேதனை நம்மை தனி ஜெபத்திற்கும், தேவனைப் பற்றி கற்றுக் கொள்வதற்கும் மட்டுமல்ல அவரது முகத்தின் ஒளியைப் பெற்றுக் கொள்ளவும் அவரது ஆவி நம்மில் பாய்ந்து வர தடையாயிருப்பவைகளை உதாசீனம் பண்ணவும் நம்மை வழி நடத்துகிறது. இந்த ஆசையின் அளவு அதிகரிக்கும் போது சாதாரண மார்க்க நெறிகளிலிருந்து நமது இருதயங்கள் தூரப்படுத்தப்படுகின்றன. உத்தம பரிசுத்தத்தைப் பெற்றுக் கொள்ளவும், கிருபையின் மேலான நிலையை அடையவும் இது உதவுகிறது.

நாம் சிருஷ்டிகளினூடே பார்த்து இந்த உறுதியான ஆசை அனேக இருதயங்களைக் கவர்ந்து இழுப்பதைக் காணும் போது அது எத்தனை அழகிய காட்சி! சில இதயங்கள் மெதுவாகவும் சில விரைவாகவும், ஆனால் ஒழுங்காகவும் நிச்சயமாகவும் இழுக்கப்படுகின்றன. தரைமேலும், கடல் மேலும், மலைகள் பள்ளத்தாக்குகள் மீதிலும் தனியான முட்கள் நிரம்பிய பாதைகளிலும், ஆயிரக்கணக்கான கஷ்டங்கள் மத்தி யிலும் கடந்து சென்றாலும் இறுதியில் அந்த அழகிய நாளில் தேவ மகிமையில் மகிழ்ந்து களிகூர முடியும். தேவனைத் தவிர வேறு எல்லாம் விரைவிலோ பிந்தியோ நம்மைக் களைப்படையச் செய்யும். அவரே எப்போதும் புதுமை யானவர். அன்புள்ள இருதயங்களுக்கு அவர் எப்போதும் புதிய கண்டு பிடிப்பைப் போல கண்களுக்குப் புலப்படுவார்.

5. பரிதாபம் நிறைந்த அன்பு

இந்த வகையான அன்பினால் நாம் அவரையும் அவரது விருப்பங் களையும் ஆதரிக்க அதிக ஆவலோடு அவருடைய மகிமையைத் தேடுகிறவர் களுமாயிருப்போம். 'பரிதாபம்' என்ப தற்கான கிரேக்க பதத்தின் கருத்து 'சேர்ந்து பாடுபடுவது' என்பதாகும். 'அதாவது ஒருவரது உணர்ச்சி, காயங்கள், எதிரான செயல்கள் இவற்றில் பங்கு கொள்வது' என்பதாகும். இவ்வகை அன்பு தேவனுக்கு எதிராக பொல்லாத வர்களும், பிசாசும் கொடுக்கும் தீமைகளில் ஆழமாக உணர்ச்சியடை கிறது. இவ்விதமான உணர்ச்சியால் தாவீது "கர்த்தாவே உம்மைப் பகைக்கிற வர்களை நான் பகையாமலும், உமக்கு விரோதமாய் எழும்புகிறவர்களை அருவருக்காமாலும் இருப்பேனோ? முழுப்பகையாய் அவர்களைப் பகைக்கி றேன், அவர்களை எனக்குப் பகைஞராக எண்ணுகிறேன்". சங்.139:21, 22 என்கிறார்.

இந்த வகையான அன்பு தேவனுடைய நாமம் வீணாக வழங்கப் படுவதையும் அவரது வார்த்தை மறு தலிக்கப்படுவதையும் கர்த்தருடைய ஓய்வு நாள் அவமதிக்கப்படுவதையும், அவருடைய நாமம் விமர்சிக்கப்படு வதையும் சகிப்பதில்லை. சிருஷ்டிகள் தேவனை உதாசீனப்படுத்துவதும், நேசிக் காமலிருப்பதும், நம்பாமலிருப்பதும், அவரைப் புகழாமலிருப்பதும் இவ்வகை யான அன்பு கண்ணீரை வரவழைக்கும். ஒரு சூளையைப் போல சீர்திருத்தவாதி களில் ஜ்வாலித்து எரிவதைப் பார்க்கி றோம். சபையிலும், தேசத்திலும் நடக்கும் பொல்லாங்குகளைப் பார்த்து அவர்கள் இடி முழக்கம் போல செயல் படுகிறார்கள். அவர்கள் தேவன் தூஷிக் கப்படுவதையும் காலின் கீழ் மிதிப் பதையும் காண்பதை விட மரிப்பதே மேல் என்று எண்ணுவார்கள்.

அவர்கள் எல்லா இடத்திலும் அவருடைய விருப்பங்களையும், எல்லா நிலைகளிலும் அவரது உரிமை, மகிமை ஆகியவற்றிற்கும் முக்கியத்துவம் அளிப் பார்கள். இவ்வித தேவ மகிமைக்காக பொய் கிறிஸ்துக்களையும், பொய் தீர்க்கர்களையும் அனுமதிப்பதில்லை. இந்த அன்பு தெய்வீகமானது, அதிக நேர்மையானது. விழிப்புள்ளதாயிருந்து தவறான உபதேசங்களையும் நாஸ்திகத் தையும் கண்டறியக்கூடியது. மற்றவர்கள்

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தவறான உபதேசங்களின் தீமையை உணருவதில்லை. இந்த அன்புதான் வீரர்களையும் இரத்த சாட்சிகளையும் உருவாக்குகிறது. இது பாவத்திற்காக துக்கப்பட்டு மக்கள் தேவனிடம் போது மான அன்பு காட்டாததைக் குறித்து துக்கப்படுகிறது.

6. தயாள சிந்தையுள்ள அன்பு

இந்த அன்பு தேவனுக்கு எல்லாப் புகழும் மகிமையும் மகிழ்ச்சியும் கிடைக்கப்பெற ஆத்துமா வாஞ்சிக்கிறது. இவ்வன்பு ஏதோ ஒரு வகையில் தேவனுக்கு ஆசீர்வாதமாகவும் லாப மாகவும் இருக்க வேண்டும் என்ற ஆசை யுடையது. ஆனால் தேவன் முற்றிலும் பரிபூரணர். எனவே அவரது அளவற்ற மகிழ்ச்சியையும் ஆசீர்வாதத்தையும் நாம் கூட்ட முடியாது என்பது தெரிந்த ஒன்று. அது அவரது ஆசீர்வாதங்கள், உடை மைகள், விருப்பங்கள் இவை ஏதேனும் கூடுமைகளிலிருந்தால் பெருக வேண்டும் என்று தேவனை வாழ்த்துகிறது.

தேவன் இரண்டு விதமான மகிமைகளை உடையவர். முதலாவது அவரது தெய்வீக தன்மையில் இயற்கை யாக அமைந்திருப்பது. பின்பு உலகத்தி லும் சிருஷ்டிகளிலும் வெளிப்படும் வெளிப்புற மகிமை. அவரது தெய்வீக தன்மையில் உள்ளடங்கியிருப்பது அவரது இயற்கையான பரிபூரணங்கள், நித்தியம், பரிசுத்தம், திரியேகம் மற்றும் அளவற்ற மகிழ்ச்சியாகும். வெளிப்படையான மகிமை விதவிதமான தன்மைகள், சிருஷ் டிக்கப்பட்ட உலகங்களின் மாட்சிமை, விதவிதமான தூதர்கள். மனிதர்கள் மற்றும் தரம் குறைந்த சிருஷ்டிகள் போன்றவற்றில் அடங்கியுள்ளன.

இந்த மகிமைகளோடு வீழ்ந்து போன மனிதனை இரட்சிப்பதன் மூலமாகவும், கிருபைகளின் வகை களாலும் தனது சிருஷ்டிகளுக்கு வழங்கும் பரிசுகள், தண்டனைகள் மூலம் காண் பிக்கும் இரக்கம், நீதி ஆகியவை களாலும் மகிமையடைகிறார். துதிகள், அன்பு, ஆராதனை ஆகியவை சிருஷ் டிகளால் ஏறெடுக்கப்படுகின்றன. தேவனில் அடங்கியிருக்கும் மகிமை அவருக்கே உரிய ஆசீர்வாதம், அதை பெருகப் பண்ணுவது கூடாது. ஆனால் அவரது வெளிப்படையான மகிமை பளபளப்பிலும், ஒளியிலும் அவர் காண்பிக்கும் கிருபை, சத்தியம் ஆகிய வற்றால் பரந்து விரிந்து பெருகக் கூடும். இந்த இடத்தில்தான் மனிதனுடைய தயாள அன்பு பரவுகிறது. எப்போதுமே தேவன் மிகப்பெரிய அறுவடையை துதிகள் மூலம் சிருஷ்டிகளிடமிருந்து பெறுகிறார்.

7. ஆராதிக்கும் அன்பு

இந்த விதமான அன்பு தேவனை ஆராதித்து பணிந்து கொள்ளுகிறது. அவரை மகிழ்ச்சியோடு ஆச்சரியத்தில் மூழ்கி நோக்கிப் பார்த்து அன்புடன் துதிக்கிறது. அமைதியாக உட்கார்ந்து தேவனை பரிசுத்த ஆச்சரியத்தோடும் ஆழமான புகழ்ச்சியோடும் சிந்தனை செய்கிறது. அது தேவனுடைய வித விதமான தன்மைகளை தேடுவதில் நின்று விடுவதில்லை. ஆனால் இவைகள் தேவனுடைய பரிபூரணமெல்லாம் கூடி ஒரே கறையில்லாத வெண்மையான அமைதி நிறைந்த மகிமையும் மாட்சி மையுமான கடலாகக் காட்சியளிக் கிறதைக் காண்கிறது. எல்லா விதமான அன்புகளிலும் இது உச்சநிலையானது.

தேவனை ஆராதிப்பது ஜெபம், இறையியல், சட்டம், கடமை அல்லது சேவை, விசுவாசம் எல்லாவற்றிற்கும் மேலானது. இது தேவனில் மகிழும் உயர் நிலை. அவரை ஆராதிப்பதில் ஆத்துமா வெப்பத்தை இதமாக அனுபவிக்கிறது. அவரது தயவால் புன்சிரிக்கிறது. அவரது மகத்துவத்தால் நடுங்குகிறது. அவரது அழகால் அழகு பெறுகிறது. அவரது இனிமையைப் பருகுகிறது. துதிப்பதற்கு வார்த்தைகளின்றி திகைக்கிறது. அவரைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, அதிசயித்து, மூச்சடக்கி, புகழ்ந்து அன்பு கூர்ந்து, பதினாயிரம் இருதயங்களிருந்தாலும் அன்புகூர முடியாதே என ஏங்குகிறது.

இவைதான் அன்பின் வகைகள். வானவில்லின் ஏழு நிறங்களாக இவை அமைகின்றன. நம் தேவனுடைய பாதபடியில் நாம் நம்மைத் தாழ்த்தி, இயேசுவையும் தூய ஆவியானவரையும் தொழுது கொள்வோம்.

ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டு விட்டீர்களா?

Have you left your first love?

E.A. Johnson

நீங்கள் ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டு விட்டீர்களானால் ஆபத்தான இடத்தில் இருக்கிறீர்கள். (வெளி. 2:4) தேவனுக்காக இருந்த உற்சாகத்தை இழந்து ஆத்துமாக்களையும் இழந்து விட்டீர்களா? அதிகமாக ஜெபிப் பதில் களைப்படைந்து விட்டீர்களா? உலக காரியங்கள் தேவ காரியங்களை விட அதிக விருப்பமாய் தெரிகிறதா?

நீங்கள் இன்னும் கிறிஸ்தவ ராயிருந்து ஆண்டவரை ஓரளவு நேசிக்கிறீர்கள். ஆண்டவருடைய ஆசீர் வாதங்களையும் அபிஷேகத்தையும் பெற்ற நீங்கள் திடீரென அவரை விட்டு விட முடியாது. ஆனால் சாத்தான் சமர்த்தன். அவன் திடீரென பயங்கர பாவங்களால் சோதிப்பதில்லை. அவன் ஆவிக்குரிய கிறிஸ்தவனை மெதுவாக ஏமாற்றுவான். நிர்விசாரம், வெது வெதுப் பான நிலை, இவை இருதயத்தில் வரச் செய்வான். அதிலிருந்து அவனது அழுத்தத்தை கிரமம் கிரமமாக அதிகரிக்கச் செய்வான். அவனை அறியாமலே சின்ன இரகசியமான பாவங்கள் இருதயத்தில் பிரவேசிக் கின்றன. அதை தேவன் மட்டும் அறிவார். அவை குரோதம், சுயநலம், பகைமை, கசப்பு, பொறாமை, கெட்ட எண்ணங்கள், பெருமை, இரக்கமின்மை போன்றவை களாகும். இது ஆவிக்குரிய இருதயத்தின் நிலை. ஆனால் மக்களால் இதைப் பார்க்க முடியாது. இவை வேரூன்றி கடின வார்த்தைகளாலும் தவறான செயல்கள் போன்றவற்றாலும் வெளிப்படும் வரை இந்த இரகசிய பாவங்களை மற்றவர்கள் காண்ப தில்லை.

வைகீகம் மற்றும் நிர்விசாரம்

தேவ வசனத்திற்கான ஆவிக்குரிய பசி அற்றுப் போகும் போது இருதயத் திற்குள் இவ்வுலக காரியங்கள் குவிந்து விடுகின்றன. தேவ வசனத்திற்கும் தூய ஆவியானவரின் சந்தோஷத்திற்குமான இடத்தை வாழ்வில் ஏதோ ஒன்று நிரப்பி விடுகிறது.

தங்கள் 'ஆதி அன்பை' விட்ட அனேகர் ஒரு விதமான திருப்தி வாழ் வோடு வாழ்ந்து கொண்டிருக்கலாம். அவர்கள் சபையில் சுறுசுறுப்பாக செயல் படலாம், வேதத்தை வாசிக்கலாம், ஆயினும் இவையெல்லாம் நிர் விசார மாகவே செய்யப்படும். ஆண்டவருக் காக சாட்சி சொல்ல ஆசைப்பட்டாலும் அதைக் கேட்கிறவர்களின் இருதயத்தை அது தொடுவதில்லை. ஏனெனில் அதில் தேவ ஆவியானவரின் அபிஷேகம் இருப்பதில்லை. ஆதி அன்பை இழந்தவர் களின் வாழ்வில் துக்கமும், நம்பிக்கை யின்மையும், மந்தமான நிலையும் காணப்படும். அவர் களுடைய இருதயம் தேவனுடைய இதயத்தோடு ஒத்துப் போவதில்லை.

மனந்திரும்பி ஆதியில் செய்த கிரியைகளைச் செய்ய வேண்டும்

ஆதி அன்பை இழந்தவர்கள் அநேக நற்கிரியைகளைச் செய்தாலும் கர்த்தர் அவைகளில் பிரியப்படுவ தில்லை. அவர் முதலாவது நமது அன்பை விரும்புகிறார். பின்பு தாமாகவே நமது விசுவாசத்தை நமது கிரியைகள் மூலமாக இயற்கையாகக் காண்பிப்போம்.

ஆவிக்குரிய இதய நோயுடைய வர்கள் நிவாரணமடைய ஒரே வழி மனந்திரும்பி தேவனோடு இணைந்து கொள்ளும் போது தங்கள் இருதயத்தில் மீண்டும் அந்த அன்பைப் பெற்றுக் கொள்வதும் அவரது விலையேறப் பெற்ற வசனத்தை விருந்தாக்கி, அதிக சமயம் அவரோடு தனியாயிருந்து, ஜெப அறையில் தனித்து ஜெபிக்க வேண்டும். இந்த ஒரே முறையில்தான் சமாதானத் தையும் தேவனோடுள்ள ஐக்கியத்தை யும் திரும்பப் பெற முடியும்.

முக்கிய அறிவிப்பு

10-ம் தியதிக்குள் பத்திரிகை வரத் தவறினால் உடனே தகவல் தாருங்கள்.

Mobile : **95432 21008**

Whatsapp : **94897 40295**

e-mail:varukayinthoothan@hotmail.com

ஆதி அன்பை இழந்தவர்களின் வாழ்வில் துக்கமும், நம்பிக்கையின்மையும், மந்தமான நிலையும் காணப்படும். அவர்களுடைய இருதயம் தேவனுடைய இதயத்தோடு ஒத்துப் போவதில்லை.

குளிர்ந்து போன அன்பு

Love grown cold

William I. Roseberry

"அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்" *(மத்.24:12)*

ஆண்டவர் நம்மிடம் தமது வருகையின் ஒரு அடையாளத்தைக் குறிப்பிடும் போது **'அனேகருடைய அன்பு தணிந்துபோம்'** என்றார். கிரமம் கிரமமாக அன்பின் அனல் தணிந்து இறுதியாக ஆவிக்குரிய உற்சாகம் தணிந்து அன்பு உறைந்த நிலைக்கு வந்து விடுகிறது. ஆயினும் எல்லாருடைய நிலையும் இதுவல்ல. தேவனைப் பின் பற்றுகிற அனேகர் இன்னுமிருக்கிறார்கள். அவர்களது அன்பு ஆவியானவருடைய தூண்டு தலால் ஒவ்வொரு நாளும் அனலடைந்து கொண்டிருக்கிறது.

நாம் இன்று அபாயமும் பயங்கர முமான ஒரு நிலையிலிருக்கிறோம். நாம் தேவபயம், தூய வாழ்வு, கிறிஸ்துவைப் போன்று தேவனிடத்திலும் மனிதரிடத் திலும் காண்பிக்கும் அன்பு இவைகளி லிருந்து விலகி அடித்துச் செல்லப்படுகி றோம். இந்தப் போக்கு தேவனுடைய பரிசுத்த வேதம் சொல்லும் அந்தஸ்தி லிருந்து மனிதத்துவங்களுக்கு நம்மை எடுத்துச் செல்லுகிறது. இதனால் எந்த ஒரு ஆத்துமாவும் இரட்சிக்கப்படுவதோ, ஒரு மனிதனைத் தன் பாவத்திலிருந்து தூக்கி விடுவதோ இல்லை. இவ்வாறு அனேகர் தேவனுக்கும் மனிதனுக்கும் காண்பிக்கும் அன்பில் தணிந்து இழந்து போகிறார்கள்.

இழந்து போனவர்களுக்கான புதுப்பிக்கப்பட்ட பாரம்

அன்பு தணிவதற்கான காரணத் தை இயேசு இவ்வாறு குறிப்பிடுகிறார். **"அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்"**. அனேக தனி கிறிஸ்தவர்களும், கிறிஸ்தவ சபைகளும் குளிர்ந்த, ஆவிக் குரியபடி மரித்துப் போன உலகத்தை அதாவது அக்கிரமமும் பாவமும் நிறைந்த உலகத்தைப் பார்த்து, நிலைமை மோச மானது, நம்பிக்கையற்றது, அதனை மனித ஒத்தாசையாலும் தேவ ஒத்தாசை யாலும் கூட ஒன்றும் செய்ய முடியாது என்று எண்ணி தங்களை மட்டுப்படுத்திக் கொண்டு கிறிஸ்துவின் வருகைக்காக காத்திருக்கிறார்கள்.

அமைதியாக உட்காராமல் நமது சபைகள் இப்படி ஜெபிக்க வேண்டும்: **"ஆண்டவரே, எங்களை எழுப்பி தரிப்பித்து அந்த வேளைக்காக ஆயத்தப்படுத்தும். எங்கள் கடமைகள் எங்களுக்கு எதிராக நிற்கின்றனவே"**. பின்பு ஆண்டவர் பயங்கர பாவியையும் உருகச் செய்யும் ஒரு பாரம் அல்லது மனவுருக் கத்தை தர அனுமதிப்போம். தேவன் தமது சித்தத்தின்படி செயல்பட சபை அனுமதித்தால் இந்த நிலையிலும் தேவன் சபையை பயன்படுத்தக் கூடியவர்.

உங்கள் அன்பு தணிந்து போனதா? அப்படியானால் நீங்கள் பாவத்திற்கு இடமளிக்கிறீர்கள். மனந் திரும்பி தேவனிடம் இழந்து போன ஆத்தும பாரத்திற்காகக் கேளுங்கள்.

தேவனை வாஞ்சிப்பது

Desiring God

Thomas Watson

"பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர வேறே விருப்பமில்லை" *சங்.73:25.*

தேவன் மேலுள்ள உண்மையான வாஞ்சையால் கிருபையின் அரசு நமது இருதயங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதை நாம் அறிவோம். நாடித்துடிப்பின் மூலமாக நாம் உயிரோடிருப்பதை அறிவது போல இதை நாம் அறிகிறோம்.

தேவன் மேல் உண்மையான வாஞ்சையோடிருப்பது உத்தமம். அவரது உயர்பண்புக்காக நாம் அவரை வாஞ்சிக்கி றோம். உத்தம பக்தன் அவரிடம் என்ன இருக்கிறது என்பதற்காக அல்ல, அவர் எப்படிப்பட்டவர் என்பதற்காக அவரை நேசிக்கிறான். அவருடைய வெகுமதிகளுக் காக மட்டுமல்ல, அவரது தூய்மைக்காக அவரில் அன்பு கூருகிறான்.

தேவன் மேலுள்ள வாஞ்சை தெவிட்டாதது. தேவனின்றி அது திருப்தி யடையாது. தாகத்தோடிருக்கிறவனை மலர்களோ, இசையோ திருப்திப்படுத்த முடியுமா? அதுபோல தேவன் மேல் வாஞ்சை யாயிருக்கிறவன் எதனாலும் திருப்தியடை யாமல்தேவனையே வாஞ்சித்து அவன் இருதயம் உடைகிறது. *(சங்.84:2; 119:20)*

தேவன் மேலுள்ள உத்தம வாஞ்சை சுறுசுறுப்பானது. அது கடும் முயற்சிக்கு வழிநடத்துகிறது. "என் ஆத்துமா இரவிலே உம்மை வாஞ்சிக்கிறது; எனக்குள் இருக்கிற என் ஆவியால் அதிகாலையிலும் உம்மைத் தேடுகிறேன்". *(ஏசா.26:9)* வாஞ்சையுள்ள ஆத்துமா, "எனக்கு கிறிஸ்து வேண்டும்! எனக்கு கிருபை வேண்டும்! எனக்குப் பரலோகம் வேண்டும்! ஒரு வேளை நான் புயலைக் கடக்க வேண்டியிருந்தாலும் இதுவே என் வாஞ்சை" என்று சொல்லும்.

தேவன் மேலுள்ள வாஞ்சை உயர்வானது. நாம் கிறிஸ்துவை உலகை விடக் கூடுதலாக அல்ல, பரலோகத்தை விட மேலாக விரும்புகிறோம். "பரலோகத் தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை". *(சங்.73:25)* பரலோகமும் கிறிஸ்து இல்லா மல் திருப்தியடையாது. கிறிஸ்து மகிமை யின் மோதிரத்தில் வைரக்கல்.

தேவன் மேலுள்ள வாஞ்சை பெருகிக் கொண்டேயிருக்கும். ஒரு துளி தண்ணீர் தாகமுள்ள பிரயாணிக்குப் போதுமானதல்ல. கிறிஸ்தவன் சிறிதளவு கிருபைக்கும் நன்றியுள்ளவனாயிருந்தா லும் மிகுந்த கிருபையாலும் திருப்தி யடைவதில்லை. அவன் கிறிஸ்துவுக்காக வும் அவரது ஆவிக்காகவும் இன்னும் அதிக தாகமுள்ளவன். ஒரு பரிசுத்தவான் அதிக அறிவு, அதிக தூய்மை, அதிக அளவு கிறிஸ்துவின் பிரசன்னம் ஆகியவற்றை உடையவன். கிறிஸ்துவின் ஒரு கனிவானப் பார்வை இனிமையானது தான். ஆனால் ஆத்துமா அவரை முகமுகமாய் தரிசிக்கு மட்டும் நிற்பதில்லை. அது கிருபையை, மகிமையால் பூரணமடைவதை வாஞ்சிக் கிறது! தேவனுடைய இனிமையில் முழுகு வதை வாஞ்சிக்கிறது.

"அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து...." *சங்.145:19.*

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

God is faithful for the past
Seventy Years

நம்முடைய வருகையின் தூதன் பத்திரிகை ஊழியம் ஜனவரி மாதம் 70-வது ஆண்டுக்குள் பிரவேசிக்கிறது, தேவனை துதியுங்கள். முதல் பக்கத்தில் **Vol:70 ஜனவரி 2024 No:1 என்று அச்சிட்டிருப் பதை காண்பீர்கள். கடந்த 70 ஆண்டுகளாக தேவன் நமக்கு உத்தமராயிருந்தார்.**

மாதந்தோறும் வருகையின் தூதன் ஊழியத்தை தாங்குகிற தேவனு டைய பிள்ளைகளுடைய வீட்டில் ஞாபகார்த்தமாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டதால், சிவகாசியில் அச்சிடப்படும் காலண்ட ரை வாங்கி நமது முகவரியை அச்சிட்டு ஆண்டுதோறும் அனுப்பி வருகிறோம். கர்த்தருடைய கிருபையினால் கடந்த ஆண்டு நமக்கு மிகச் சிறந்த காலண்டர் கிடைத்தது. கிறிஸ்தவர் அல்லாத அவர்கள் முதல் பக்கம் இவ்விதம் அச்சிட்டிருந்தார்கள்.

JESUS CALLING

Come unto me, All ye that labour and heavy laden, and I will give you rest. **Mathew 11:28**

புதிய ஆண்டும் அனுப்பி வருகி றோம். சில வாசகர் இரண்டு முறை ரூபாய் 500 அனுப்பியிருக்கிறீர்கள், சிலர், ஒரே ஆண்டு ரூபாய் 200, 300, 500 என்று அனுப்பியிருக்கிறீர்கள். மாத காணிக்கை அனுப்புகிறவர்கள், சிறப்பு காணிக்கை அனுப்பினவர்கள் யாருக் காவது காலண்டர் வர தவறியிருந்தால் தயவாய் எங்களுக்குத் தெரிவியுங்கள்.

புதிய முகவரி பட்டியல்

வருகையின் தூதன் பத்திரிகை அனுப்புவதற்காக புதிய முகவரி பட்டியல் தயாரித்து வருகிறேன். தேவனுடைய பிள்ளைகள்....

மாதந்தோறும் தாங்கும்படி தயவாய் கேட்கிறேன்.

சிறப்பு காணிக்கைகள் அனுப்பி உதவுங்கள்.

ஆண்டு காணிக்கை அனுப்புகிற வர்கள் குறைந்த பட்சம் ரூபாய் 500 அனுப்புங்கள்.

பரலோகத்திற்கு பணத்தை எடுத்துச் செல்ல முடியாது; ஆனால் அனுப்பி வைக்க முடியும்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

தேவனுடைய பிள்ளைகளாகிய உங்களுக்கு எங்கள் அன்பான, ஆசீர்வாதமான

புத்தாண்டு 2024 வாழ்த்துக்கள்!

உங்கள் அன்பு சகோதரன்
வெஸ்லி தேவதாசன்
W. சாமுவேல் ஃபின்னி

உதவி : 94897 40295
அலுவலகம் : 95432 21008

நீங்கள் எப்படி தேவனில் அன்பு கூருகிறீர்கள்?

How do you love God?

Dave Butts (1953-2022)

வசனத்துக்குக் கீழ்ப்படிதலும், பாவ அறிக்கையும் மனந்திரும்புதலும், தூய்மையுடன் நடப்பதும் தேவனை நேசிப்பதற்கான அடையாளங்களாகும். இவைகளைத் தவிர இன்னொரு முக்கிய அடையாளத்தை நான் ஆலோசனையாகக் கூற விரும்புகிறேன். தேவனை நேசிப்பது என்பது அவரோடிருப்பதை விரும்புவது என பொருள்படுகிறது.

நாம் ஒருவரை நேசிக்கும் போது அவரால் கவரப்படுகிறோம். அவரோடு அதிக சமயத்தை செலவிட விரும்புகிறோம் அது தான் மனித இயல்பு.

தாவீது இவ்வித ஆசையை சங்.27:4-ல் வெளிப்படுத்துகிறார். "**கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்; நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும் அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யும்படியாகவும் நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப் பதையே நாடுவேன்**".

அன்பால் பாதிக்கப்பட்ட ஒரு இருதயம் இவ்வாறு கதறும்: "**தேவனே, நான் உம்மோடு இருக்க விரும்புகிறேன். நீர் இருக்குமிடத்தில் நானும் இருப்பதே என் விருப்பம்**". சங்கீத புஸ்தகத்தில் இந்த ஆவலை அடிக்கடி பார்க்கிறோம்.

"**சேனைகளின் கர்த்தாவே, உமது வாசஸ்தலங்கள் எவ்வளவு இன்பமானவைகள்; என் ஆத்துமா கர்த்தருடைய ஆலய பிரகாரங்களின் மேல் வாஞ்சையும் தவனமுமாயிருக்கிறது. என் இருதயமும் மாம்சமும் ஜீவனுள்ள தேவனை நோக்கிக் கெம்பீர சத்தமிடுகிறது**" சங்.84:1,2.

கிறிஸ்தவர்களாகிய நமக்கு ஒரு நல்ல செய்தி என்னவென்றால் ஆண்டவரோடு இருப்பதற்காக எருசலேமிற்கோ வேறு எந்த இடத்திற்கோ செல்ல வேண்டாம். நம்மோடு வாசம் பண்ண அவர் வந்திருக்கிறார். இயேசு "ஒருவன் என்னிடத்தில் அன்பாயிருந்தால்... நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்" என்றார். (யோ.14:23) நாம் அவருடைய பிரசன்னத்தை அனுதினமும் கருத்துடன் உணர வேண்டும்.

அந்த உணர்வு இல்லாமலிருப்பது நமது அன்புக்குறைவைக் காண்பிக்கிறது. தேவனோடுள்ள உறவைக் குறித்த வாஞ்சையற்றிருப்பதாலும் பிற காரியங்கள் நம் இருதயத்தில் குழுமியிருக்க இடமளிப்பதாலும் தேவன் தாமே நம்மில் வாசம் பண்ணுவதை, அந்த ஆச்சரியமான சத்தியத்தை நாம் மறந்து விடுகிறோம்.

தேவனோடுள்ள தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள பிற தொடர்புகளைப் போல நாட்கள் செல்லலாம். அவரோடு சமயம் செலவழிப்பது, அவரை நேசிப்பது, அவரது பிரசன்னத்தில் களிகூருவது இவையெல்லாம் அதிலடங்கும். சமயத்தை ஜெபத்திலும் வேத வாசிப்பிலும் செலவு செய்வது ஒரு முக்கிய மாற்றம். ஜெபம் என்பது தேவனிடமிருந்து எதையோ பெற்றுக் கொள்வது மட்டுமல்ல அவருடைய சமூகத்தில் சமயத்தை செலவு செய்வது என்று உணருவோம். உட்பார்வைக்காக மட்டும் வேதத்தை வாசிக்காமல் அது தேவனை சந்திக்கும் ஒரு சமயமாக பார்க்க வேண்டும்.

தேவன் நம்மை அதிகமாக நேசித்தார். நமக்காக சிலுவையை சகித்து, நாம் அவரோடு நித்தியமாக வாழச் செய்கிறார். அவர் நம்மோடு வாழுவதை விரும்புகிறார். நமது அன்பின் பிரதிவினை வாழ்நாள் முழுவதும் பாசத்தோடு வாழும் ஆசையாகும். ஏதோ ஒரு நாள் பரலோகில் சென்று வாழ்வதல்ல, ஒவ்வொரு நாளும் இவ்வுலகில் அவரோடு வாழ வேண்டும்.

நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் ஆரம்பமாக வேண்டும்

Judgement must begin at the house of God.

W.B. Stevenson

தேவ ஜனங்கள் மத்தியில் நியாயத்தீர்ப்புக்குச் சரியான இடமளிக்கப்படுமானால் இறுதி நியாயத்தீர்ப்பின் நாளை விட இப்போது பாவத்திற்கு சிறிதளவும் இளக்காரம் அளிக்கப்படுவதில்லை. இப்போது நாம் நமது நீதியின் அளவின்படியே நியாயந்தீர்க்கப்படுவோம். தேவனுடைய நீதியின் அளவை ஏற்றுக் கொள்ளாத ஆத்துமா அதனை இறுதி நியாயத்தீர்ப்பின் போது ஏற்றுக் கொள்ள வேண்டியதாகும்.

இவ்வுலகிலுள்ள ஒரு ஆவி, அவரைப் போல் நாம் வாழ்வது கூடாது. அப்பாதை மிகவும் ஒடுங்கிய பரிசுத்த வழி என்று கூறுகிறது. ஆனால் தூய ஆவியானவரின் நியாயத்தீர்ப்பின் நாள் ஒருவரை சந்திக்கும் போது அவரது நிலை சரியானது எனக் காண முடியும். தூய ஆவி முற்றிலும் ஒருவரை நிரப்பும் போது பாவமானவை அனைத்தும், தூய்மையற்றவை அனைத்தும் விலக்கப்படும். தூய ஆவியை அணைத்துப் போடக் கூடாது. பாவமும் தவறான ஆவியும் விடுவிக்கப்படும் போது பரிசுத்தவான் பாதிக்கப்படுகிறான்.

தேவனின் நியாயத்தீர்ப்பு, நாளில் மனிதன் தன்னைச் சரியாக நிதானித்து அறிந்து கொள்ளவும் தவறு எங்கிருக்கிறது என்பதை கண்டு கொள்ளவும் உதவும். இத்தகைய ஒரு அனுபவம் மட்டுமே எழுப்புதலுக்குத் தேவையானதும், தேவனுக்கு மகிமையைக் கொண்டு வருவதுமாகும்.

இறுதி நியாயத்தீர்ப்பிலே தேவனுடைய நீதி பூரணமாக விளங்கும். அவருடைய பரிசுத்தம் கேள்விக்கிடமளிப்பதில்லை. பாவம் பாவமாக வெளிப்படுத்தப்படும். அது கனப்படுத்தப்படுவதில்லை. இதுவரை கண்டிராத ஒரு நிலையிலே மக்கள் பாவத்தைக் கண்டு கொள்வார்கள். எழுப்புதல்கள் மூலம் நியாயத்தீர்ப்பு வெளிப்படுத்தப் பட்டு வழிகள் நேராக்கப்பட்டு தேவ நாமம் மகிமையடைய வேண்டும்.

உங்கள் கவனத்திற்கு

நீங்கள் கடிதம், காணிக்கை அனுப்பும் ஒவ்வொரு தடவையும், உங்கள் பத்திரிக்கை பதிவு எண், தொலைபேசி எண் இரண்டையும் கட்டாயம் எழுதுங்கள்.

(மாதிரிக்காக) **வாசகர் ஒருவரின் முகவரி**

NI 1279 (பதிவு எண்)
Mr. Giftson Samuel
NIMS HOUSE Plot A12
Brindavan colony, Kapura & P.O
Vyara, Tapt Dt, Gujarat
Pin Code - 394 655
Cell: 94438 45402 (தொலைபேசி எண்)

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

கிறிஸ்துவின் உயரிய **அன்பி**லிருந்தும் அவரது உன்னத சேவையின் உரிமையிலிருந்தும் வாழ்வின் சுவைகளாலும், சீர்திருத்தங்களாலும் திருப்பப்பட்டு, விடுகிறோம்.

ஆயிரக்கணக்கான **கிறிஸ்தவர்கள்** தங்கள் பணத்தினை கலைகளுக்காக, சொகுசான வாழ்வுக்காக, சிறப்பான இல்லங்களுக்காக, விலையுயர்ந்த வீட்டு உபயோகப் பொருட்களுக்காக, விலையுயர்ந்த மோட்டார்களுக்காக, இன்னும் அவசியமற்ற அலங்கரிப்புகளுக்காக, இசை மற்றும் மார்க்க சம்பந்தமான பொழுதுபோக்குகளுக்காக செலவு செய்கிறார்கள்.

அன்பு என்பது மனஎழுச்சியை விட மேலானது. அது கண்டனம், உறுதி, பேச்சுவன்மை இவை எல்லாவற்றையும் விட மேலானது. அது செயல்பாட்டில் இருக்க வேண்டும். தியாகம், கீழ்ப்படிதல் ஆகியவற்றிற்கு உடன்பட்டு அவர் கட்டளையிடும் சேவைதனை செய்ய வேண்டும்.

நமது தோல்விகளுக்கு முக்கிய காரணமாயிருப்பது **அன்பின்** தோல்விகளல்லவா? இது வாழ்விற்கும், குணாதிசயத்திற்கும் ஏற்படும் மிகப்பெரிய சோதனை. நமது குறைபாடுகள், தோல்விகள் ஆண்டவர் பேரிலுள்ள **அன்பின்** குறைபாடு, சுயநல ஆவி, அவருடைய உயரிய **அன்பு**, சித்தம் ஆகியவற்றிற்குப் பதிலாக வேறெதையோ நாடுவது ஆகியவற்றால் நேரிடுகிறது.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason